# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு – III, 2019

## சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 07

எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சவால்களை சமாளிப்பதில் சர்வதேச மனிதாபிமானச் சட்டக் கட்டமைப்பிலான போதுமாந்தன்மை தொடர்பில் திறனாய்ந்து கருத்துரை செய்க. அதிகார ஆதாரங்கள் மற்றும் உதாரணங்களைச் சுட்டிக்காட்டி உமது விடையை ஆதரப்படுத்துக.

2. ஹரிகானா மற்றும் சாகோ ஆகியன அயல் நாடுகளாகும். ஹரிகானாவில் சிறுபாண்மையினராகவும், சகோவில் பெரும்பாண்மையினராகவும் விக்டோரியன்ஸ் என்பவர்கள் காணப்படுகின்றனர். ஹரிகானா அதிகார அமைப்புகளுக்கு எதிராக பல எதிர்புகளை விக்டோரியன்ஸ் முன்னெடுத்துள்ளனர். ஹரிகானாவில் சிறுபான்மையினரின் உரிமைகள் மீறப்படுவதான சாட்டுதல்கள் தொடர்பில் சாகோ கவலையடைவதுடன், தென் ஹரிகானாவிலுள்ள போர்கலங்கள் மற்றும் வெடிப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்கு எதிராக ஒரு சனிக்கிழமை தினத்தன்று தாக்குதலொன்றினைத் தொடுப்பதற்கு தீர்மானித்தனர். எனினும், வெள்ளிக்கிழமையன்று, ஆயுத முறையமைப்பில் ஏற்பட்ட தவறொன்று காரணமாக தொழிற்சாலையில் வெடிப்பொன்று சம்பவித்தது. பல உயிரிழப்பகளையும் நூற்றுக்கணக்கான பணியாட்களுக்கு காயங்களையும் இந்த வெடிப்பு விளைவித்தது. உளவுத்துறைத் தகவல்களின் மூலம் கண்டறியப்பட்ட சாகோவின் இராணுவ அலகுகளின் மீது வான்வழிக் குண்டுத் தாக்குதலை மேற்கொள்ளவதற்கு ஹரிகானா தீர்மானிக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட இலக்கினை துல்லியமாக தாக்க தவறியதுடன், எதிரி ஆள்புலத்தின் மீது தோராயமாக குண்டுகளை ஹரிகானா படைகள் வீசியது. இராணுவ கட்டிடங்கள் பலவற்றுக்கு அருகாமையிலுள்ள இடமானது பொதுமக்களுக்கான வாழிடமாக பாவிக்கப்பட்டு வந்ததுடன் வான்வழிக் குண்டுத் தாக்குதல்களின் விளைவாக கடுமையாகச் சேதமடைந்திருப்பதாக சாகோ கோருகின்றது. பொதுமக்கள் பலரும் இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. பிரதான நீர்த் தாங்கியும் பகுதியளவில் அழிக்கப்பட்டுள்ளது. சாகோ போராளிகள் மீதான ஹரிகானா படையினரின்

தாக்குதலை எதிர்கொள்வதற்காக சாகோவின் விவசாயிகள் ஐந்து பேரை மனிதக் கேடயமாகத் தொழிற்படுவதற்கு விருப்பத்துடன் தெரிவு செய்துள்ளனர் என்று அறிக்கைகள் வெளிப்படுத்துகின.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழான திறத்தவர்களின் பொறுப்புடைமைகளை மதிப்பீடு செய்க.

3. கோசி மற்றும் மேரு என்பன ஆயுத மோதலொன்றில் ஈடுபட்டு வருகின்ற அருகருகேயுள்ள இரண்டு நாடுகளாகும். தீப்பிரவாகமொன்றை ஏவி இயக்கக்கூடிய திறங்கொண்ட 'கினி' என்ற பெயருடைய புதிய ஆயுதமொன்றை மேரு அபிவிருத்திச் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆயுதமொன்றினை மேரு பரிசோதனை செய்வதுடன், அது பயணிக்கும் பாதையில் அகப்படும் அனைத்துப் பொருட்களையும் எரித்துச் சாம்பலாக்கும் திறன் கொண்டது என்பதனைச் செய்மதிப் படங்கள் நிரூபிக்கின்றன. கோசிப் படைகள் மேருவின் ஆள்புலத்தின் மேல் திரவமொன்றினைத் தூவும் வான்வழி ஆயுதமொன்றினை பயன்படுத்தியமையால் அமிலக் காயங்கள் மற்றும் வலி மிகுந்த இறப்புகளை அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விளைவித்ததுள்ளதாக மேரு ஆயுதப் படைகளின் கட்டளைத் தளபதியான டோங்கா கோருகின்றார். அத்திரவத்தின் விளைவாக விவசாயி ஒருவரின் ஒட்டுமொத்த விவசாயமும் அழிவடைந்துள்ளன. காட்டில் நடைப்பயணம் செய்துக்கொண்டு இருந்த இளம் மாணவர்கள் குழுவொன்றும் இத்திரவத்தால் நனைந்ததன் காரணமாக முக மற்றும் தோல் காயங்களால் அவதியுற்றது. அந்த மாணவர்களில் இருவர் பகுதியளவில் கண் பார்வையை இழந்தனர். தெரிவு செய்யப்பட்ட இராணுவ இலக்குகளை குறிவைத்துத் தாக்கும் இயலுமையுடைய உயர் அதிநவீன ஆயுதமொன்றாக வான்வழி ஆயுதம் காணப்பட்டதாக கோசியின் கட்டளைத் தளபதி லுமா தெரிவிக்கின்றார். 'கினி'யை உற்பத்தி செய்ததன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களை மேரு மீறுவதற்கு முயற்சிததுள்ளதாக லூமா மேலும் கண்டனம் தெரிவிக்கின்றார். மேருவின் இராணுவ பலத்தை அதிகரிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டு அவர்களுடைய முயற்சிகள் இருந்ததாக டோங்கா கூறுகின்றார். இவ்விடயம் தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் செயலகம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச சஞ்சிகை ஒன்றிற்கு எழுதி வருகின்ற சர்வதேச மனிதாபிமானச் சட்ட அறிஞரொருவறாக உம்மை கருதிக் கொள்க. கோசி மற்றும் மேரு ஆகிய இரண்டு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ அரசுகள் என்பதுடன், 1949 ஆம் ஆண்டின் ஜெனீவா சமவாயங்கள் மற்றும் அதன் 1977 ஆம் ஆண்டின் மேலதில பின்னேடுகள் என்பனவற்றுக்கு அரசு தரப்புகளாகும் என்று கருதிக்கொண்டு மேற்கூறப்பட்ட நிகழ்வுகளை பகுத்தாராய்க.

4. 'ஆயுத மோதலொன்று இடம்பெற்றுக் கொண்டு இருக்கையில் பல்வேறு காரணங்களுக்காக சண்டைகளில் ஈடுபடாத தனிநபர்கள் பாதுகாக்கப்பட்ட நபர்களாகக் கருதப்படுவர். எனினும், வேறுபட்ட வகையிலான பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் தன்மை மற்றும் அளவு என்பன அத்தகைய பகுப்பாக்கத்தில் மட்டும் தங்கியிராது, ஆயுத மோதலின் தன்மையிலும் தங்கியுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட பாதுகாப்பானது, அத்தகைய விசேட அந்தஸ்து காப்பானது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற அல்லது அப்பாதுகாப்பை வழங்குதல் நடைமுறையில் சாத்தியமற்றதாக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே அவ்வாறு வழங்கப்படுள்ள பாதுகாப்பானது இல்லாமலாக்கப்படும்.'

மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகள், வழக்குகள், மற்றும் உதாரணங்களை மேற்கோட்காட்டி உமது விடைக்கான காரணங்களை வழங்குக.

5. மினா மற்றும் வீட்டா ஆகிய அரசுகள் இரண்டும் மினாவின் வடக்கு பிராந்தியத்தில் ஆயுத மோதலிலொன்றில் ஈடுபட்டு வருகின்றன. மினாவின் அரச ஆயுதப்படைகள் 'மினாடிஸ்' எனப் பெயரிடப்பட்ட ஆயுதக் குழுவுடன் ஆயுத மோதலொன்றில் ஈடுபட்டுள்ளது. மினா மற்றும் வீட்டா என்பன 1949 ஆம் ஆண்டின் ஜெனீவா சமவாயங்கள் மற்றும் 1977 ஆம் ஆண்டின் அதன் மேலதில பின்னேடுகள் என்பனவற்றிற்கு அரசுத்தரப்புகளாகும் எனக் கருதிக் கொண்டு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ள நிலமைகளில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதை ஆராய்க.

(அ). தமது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சரணடைந்த போதும் மினா போராளிகள் வீட்டா போராளிகளை கொடூரமான முறையில் கொலை செய்துள்ளனர். வீட்டா போராளிகள் மீது மினா, கண்களைக் குருடாக்கச்செய்யும் கதிரியக்க ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது.

(ஆ). மினாவின் வடக்கு பிராந்தியத்திலிருந்து சில வரலாற்று தொல்பொருட்களை வீட்டாவுக்கு எடுத்துச் சென்றுள்ளது. 'மினாவில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள்' எனப் பெயரிடப்பட்ட சேகரிப்பொன்று வீட்டாவின் மத்திய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மினாவில் கண்டெடுக்கப்பட்ட மரத்திலான பண்டைய கட்டமைப்புகளை வீட்டாவின் போராளிகள் தீ மூட்டியுள்ளனர். அவை கலாச்சார பாரம்பரிய வலயமொன்றைச் சேர்ந்தவை என மினா கோருகிறது.

(இ). விட்டாவின் தடுப்புக் காவல் முகாமொன்றிலிருந்து தப்பித்து வந்த சிவிலியனொருவனான ரிக்கா என்பவன், பல்வகையான பரிசோதனைகளுக்கு அவன் உட்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றான். கண்டறியப்பட்டிராத வைரஸ்களால் தாக்கப்பட்டுள்ளதாக அவன் கூறுகின்றான். பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தடுப்புக்காவல் முகாமில் பணயக்கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ஈ). பிடிபட்ட இரண்டு வீட்டா போராளிகள், மினா படைகளில் சேர்ந்துக் கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டனர். பிடிபட்ட மூன்று போராளிகள் நிலத்தடி பதுங்கு குழிகளில் சிறைவைக்கப்பட்டுள்ளதுடன் நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே வழங்கப்பட்டது.

(உ).பாதுகாப்பான வலயத்திலிருந்து 4,000 ஆண்கள் மற்றும் சிறுவர்களை பிடித்துள்ளதுடன் மினா போராளிகளுக்கும் மினாடிஸிற்கும் இடையில் தீவிர சண்டை நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் ஆள்புலத்திற்கு மினாடிஸின் உறுப்பினர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சாட்டுதல் செய்கின்றனர். அத்தகைய ஆண்கள் மற்றும் சிறுவர்கள் இறந்துள்ளமை பின்னர் கண்டறியப்பட்டுள்ளது.

6. சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது, ஆயுத மோதல்களுக்கான சட்டமொன்றென அழைக்கப்பட்ட போதிலும், ஆயுத மோதலுக்கு பிந்திய காலப்பகுதியொன்றில் கூட பொருத்தமுடையதாக தொடர்ந்திருக்கும்.

   போருக்கு பிந்திய இலங்கையின் பின்னணியை சம்பவ ஆய்வொன்றாகக் கொண்டு மேலுள்ள கூற்றினை ஆராய்க.

7. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரயோகமானது வெற்றிடமொன்றில் இடம்பெறமாட்டது. பெரும்பாலான சமயங்களில், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துடனும் / சட்டம் அல்லது சர்வதேக் குற்றவியல் சட்டம் என்பனவற்றுடன் ஒருங்கே பிரயோகிக்கப்படும். பல்வேறு சட்ட பரப்புக்களை ஒரே நேரத்தில் பிரயோகிப்பதுடன் தொடர்புடைய சிக்கல்களானவை, அம்மூன்று வகைச் சட்டங்களினதும் பரப்பெல்லை, வலிதாந்தன்மை மற்றும் பிரயோகம் தொடர்பிலான கருத்து வேறுபாடுகளை அதிகரிக்கும். மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகளையும் தீர்ப்புச் சட்டங்களையும் எடுத்துக்காட்டி உமது விடைகளுக்கான நியாயங்களைத் தருக.

*****